28 April 2010

# ஆடிஸ்டிக் மாணவர்களுக்கு புதிய பள்ளி



கற்றல் ஆற்றல் குறைந்த மாணவர்களை மனதில் கொண்டு அவர்களுக்காகவே கட்டப்பட்ட பள்ளியில் 'பாத் லைட்' பள்ளி மாணவர்களுடன் நேற்று காலையை கலகலப்பாகத் துவங்கினார் கல்வி அமைச்சரும் இரண்டாம் தற்காப்பு அமைச்சருமான டாக்டர் இங் எங் ஹென். பிறகு 'ஆடிசம்' வள நிலையத்தின் தலைவர் மற்றும் 'பாத் லைட்' பள்ளி நிர்வாகத்தின் மேற்பார்வையாளர் குமாரி டெனிஸ் புவா, அமைச்சர் இங் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள், முதல்வர்கள் ஆகியோருக்கு பள்ளியை சுற்றிக் காட்டினார்.

படம்: தி ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்

## ...கம்

...அறை வீடு போல் காட்சியளிக்கும்

...மயலறை, 'பர்கர்', பழச்சாரு ...சைக்கூடம் கொண்ட சிற்றுண்டிச் ...ணவர்களின் படைப்புகள் கொண்ட ...த்தகக் கடை, பயிற்சி அளிக்கவும் ...சிளுக்காகவும் 185 பேர் ...சதி கொண்ட அரங்கம்.

...சிறப்பு அம்சங்களுடன் கற்றல் ...த மாணவர்களுக்காகவே ...முதல் முறையாக ஒரு பள்ளித் தளம் ...சதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

...கியோ வட்டாரத்தில் ...தம் $34 மில்லியன் மதிப்புள்ள ...ள்ளிக்கூடத்தின் புதிய தளம் ...மான துவக்கத்திற்கு நேற்று கல்வி ...இரண்டாம் தற்காப்பு ...ன டாக்டர் இங் எங் ஹென் ...க அளித்திருந்தார்.

...நிலை, உயர்நிலையில் ...கள் படிக்கும் 1.6 ஹெக்டர் ...இப்புதிய வளாகம் பல 'பாத்லைட்' ...மற்றும் ஆசிரியர்களின் மனதைக் கவர்ந்துள்ளது.

"இப்போது தாராளமான இடவசதி இருக்கிறது. எங்களது மாணவர்களுக்கென்றே பார்த்துப் பார்த்துக் கட்டியதால் வசதிகள் ஏராளம்." என்றார் 'பாத் லைட்' பள்ளியின் ஆசிரியை திருமதி ஞா.தே. ஃபோலரன்ஸ் செல்வமனோஹரி.

உயர்நிலை இரண்டில் படிக்கும் பேட்ரிக் வீ தன் புதிய பள்ளி மணி ஓசையையும் இசையையும் திரை அரங்கத்தோடு ஒப்பிட்டு பேசினார்.

குளிர் சாதன வசதி அமைந்த அறைகளும் அக்கறைமிக்க ஆசிரியர்களும் தன்னை மிகவும் கவர்ந்திருப்பதாகக் கூறினார் மாணவர் பேட்ரிக்.

'பாத் லைட்' பள்ளியின் சேவைகளை நாடும் மாணவர்களைப் பள்ளி ஏற்றுக் கொள்ளும்' என்று கூறிய குமாரி டெனிஸ், பள்ளி 600 மாணவர்களை இலக்காகக் கொண்டுள்ளது என்றார்.

அத்துடன் சிறப்பு கல்வி மற்றும் மூளை வளர்ச்சி குன்றிய மூத்த மாணவர்களுக்காக தகவல் தொழில் நுட்பப் பள்ளியும் வாழ் நாள் கற்றல் சங்கமும் துவங்கவுள்ளதாக 'பாத் லைட்' பள்ளி நிர்வாக மேற்பார்வையாளர் குமாரி டெனிஸ் கூறினார்.